# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2019 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம்

---

*(2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2019, நவெம்பர் மாதம் 01 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2019 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம்

[2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ. - ஓ. 9/2019

## 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1**. இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், இதன்கீழ் வெவ்வேறு நடைமுறைக்கு வரும் தேதிகள் குறித்துரைக்கப்பட்டாலொழிய, 2019, நவம்பர் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) 2018 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவின் (iv) ஆம் பந்தியின் (12) ஆம் உட்பந்தியில், "இறக்குமதியாளரினால் மாத்திரம் விற்கப்பட்ட அத்தகைய சிகரெட்டுக்கள்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2019, நவம்பர் 1 ஆந்தேதிக்கு முன்னர் இறக்குமதியாளரினால் மாத்திரம் விற்கப்பட்ட அத்தகைய சிகரெட்டுக்கள்; அத்துடன்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:-

"உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் குறித்தசில ஏற்பாடுகள் ஏற்புடையன வாதல்.

8. (1) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் விவரத்திரட்டுக்கள் முதலியன தொடர்பாக XII ஆம் அத்தியாயத்தின் 106, 107, 108 மற்றும் 112 ஆகிய பிரிவுகளிலுள்ள ஏற்பாடுகள், வரி மதிப்பீடுகள் தொடர்பாக

அத்தியாயம் XXII, மேன்முறையீடுகள் தொடர்பாக அத்தியாயம் XXIII, வரிமதிப்பீடுகளின் இறுதியான தன்மையும் பிழையான விபரத் திரட்டுக்களுக்கான தண்டமும் தொடர்பாக அத்தியாயம் XXIV, தவணை தவறிய வரியும் அதனுடன் சேர்க்கப்பட்டுள்ள தொகைகளும் தொடர்பாக அத்தியாயம் XXV, வரி அறவிடுதல் தொடர்பாக அத்தியாயம் XXVI, பல்லினமானவை தொடர்பாக அத்தியாயம் XXVII, தண்டங்களும் தவறுகளும் தொடர்பாக அத்தியாயம் XXIX, நிருவாகம் தொடர்பாக அத்தியாயம் XXX இன் 209 ஆம் பிரிவு மற்றும் பொதுவான கருமங்கள் பற்றிய அத்தியாயம் XXXI என்பன, இச்சட்டத்தின் கீழ் விவரத்திரட்டுக்களைக் கொடுத்துதவுதல், வரிமதிப்பீடுகள், வரிமதிப்பீடுகளுக்கெதிரான மேன்முறையீடு, வரிமதிப்பீடுகளின் இறுதியான தன்மையும் பிழையான விபரத் திரட்டுக்களுக்கான தண்டமும், தவணை தவறிய வரியும் அதனுடன் சேர்க்கப்பட்டுள்ள தொகைகளும், வரி அறவிடுதல், பல்லினமானவை, தண்டங்களும் தவறுகளும், நிருவாகம் மற்றும் பொதுவான கருமங்கள் என்பவற்றுக்கு, 2018, ஏப்பிறல் 1 ஆந்தேதிக்கு முந்திய காலப்பகுதிக்காக, ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) நிருவாகம், பதிவேடு வைத்திருத்தலும் தகவல் சேகரித்தலும், வரி விபரத்திரட்டுக்கள், வரி மதிப்பீடுகள், ஆட்சேபனையும் மேன்முறையீடுகளும், வட்டி, வரியின் அறவீடு, தண்டங்கள், குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பன தொடர்பாகவுள்ள 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தியாயங்கள் IX, X, XI, XII, XIII, XV, XVI, XVII, XVIII மற்றும் XIX என்பவற்றின் ஏற்பாடுகள், முறையே, இச்சட்டத்தின் கீழான நிருவாகம், பதிவேடு வைத்திருத்தலும் தகவல் சேகரித்தலும், வரி விபரத்திரட்டுக்கள், வரி மதிப்பீடுகள்,

ஆட்சேபனையும் மேன்முறையீடுகளும், வட்டி, வரியின் அறவீடு, தண்டங்கள், குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுக்கு, 2018, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக, (3) ஆம் உட்பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய, ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) முற்போந்த (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் பின்வரும் திரிபுகளுக்கமைய ஏற்புடையனவாதல் வேண்டும்:–

(அ) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தகைய ஏதேனும் ஏற்பாட்டிலுள்ள வரிமதிப்பீட்டாண்டுக்கான குறிப்பீடு ஒவ்வொன்றும், இச்சட்டத்தில், ''இயைபான காலாண்டுக்கான'' குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தகைய ஏதேனும் ஏற்பாட்டிலுள்ள வரிமதிப்பிடற்பாலதான வருமானத்துக்கான அல்லது வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்துக்கான குறிப்பீடு ஒவ்வொன்றும், இச்சட்டத்தில் ''பொறுப்புக்குள்ளாகத்தகு மொத்த விற்பனை வரவுக்கான'' குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தகைய ஏதேனும் ஏற்பாட்டிலுள்ள உண்ணாட்டரசிறைக்கான குறிப்பீடு ஒவ்வொன்றும், இச்சட்டத்தின் நியதிகளுக்கிணங்க விதிப்பனவு

செய்யப்பட்டு அறவிடப்பட்ட வரிக்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) இச்சட்டத்தின் கீழான ஏதேனும் இயைபான காலாண்டுக்கான விபரத் திரட்டானது, அத்தகைய காலாண்டு முடிவடைந்தபின்னர் உடனடியாகத் தொடங்குகின்ற மாதத்தின் இருபத்தோராவது நாளன்று அல்லது அதற்கு முன்னர் கொடுத்துதவப்படுதல் வேண்டும்; மற்றும்

(உ) வரிமதிப்பீடு அல்லது மேலதிக வரி மதிப்பீடு எதுவும் பின்வரும் எவரேனுமாள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் செய்யப்படுதலாகாது-

(i) இயைபான காலாண்டினுள் எந்த வரிமதிப்பீடு அடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட்டின் உடனடுத்துப் பின்வரும் வரிமதிப்பீட்டாண்டின் நவம்பர் மாதத்தின் முப்பதாம் நாளிலிருந்து 2018, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப் பகுதிக்கு மற்றும் 2018, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு முப்பது மாதங்கள் முடிவுற்ற பின்னர், (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வரிமதிப்பீட்டாண்டுக்

கான அத்தகைய இயைபான காலாண்டுக்கான விபரத் திரட்டொன்றை கொடுத்து உதவியுள்ள ஆள்; அல்லது

(ii) இயைபான காலாண்டினுள் எந்த வரிமதிப்பீடு உள்ளடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட்டை உடனடுத்துப் பின்வரும் வரிமதிப்பீட்டாண்டின் நவம்பர் மாதத்தின் முப்பதாம் நாளிலிருந்து நான்காண்டுகள் முடிவடைந்த பின்னர், இப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவ தவறியுள்ள ஆள்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. இரண்டாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது, "உண்ணாட்டரசிறைச் சட்டம்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

' "உண்ணாட்டரசிறைச் சட்டம்" என்பது-

(i) 2018, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் என்றும் ; அத்துடன்

(ii) *2018*, ஏப்பிறல் *1* ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னரான காலப்பகுதிக்காக, *2017* ஆம் ஆண்டின் *24* ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் என்றும்,

பொருளாகும்;'.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**5**. இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் பாகம் I இல் -

(அ) அதன் (XLIX) ஆம் விடயத்தில், "கோவையிடும் இலக்கங்களின்கீழ் இனங்காணப்பட்டதும்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கோவையிடும் இலக்கங்களின்கீழ் 2019, நவம்பர் 1 ஆந்தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக இனங்காணப்பட்டதும்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (LIV) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"(LIV) வெட்டப்பட்டு பட்டை தீட்டப்பட்டதன் மேலும் அத்துடன் வெட்டப்பட்டு பட்டைதீட்டும் அத்தகைய சேவைக்கான கொடுப்பனவு வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்பட்டு வங்கியொன்றினூடாக இலங்கைக்கு அனுப்பப்பட்டுமிருப்பின் இரத்தினக் கற்களை மீள் ஏற்றுமதி செய்யும் நோக்கத்துக்காக, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

யில் பதிவுபெற்றுள்ள ஆளொருவரினாலான அத்தகைய இரத்தினக்கற்களின் இறக்குமதி;";

(இ) அதன் (LV) ஆம் விடயத்தில், "மூலப் பொருட்களினதும் இறக்குமதி." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மூலப் பொருட்களினதும் இறக்குமதி;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஈ) அதன் (LV) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(LVI) *2007* ஆம் ஆண்டின் *48* ஆம் இலக்க, விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுக்கமைய இறக்குமதிசெய்யப்பட்ட பண்படுத்தப்படாத செம்பனை எண்ணெயிலிருந்து அல்லது இறக்குமதி செய்யப்பட்ட செம்பனை ஒலேனிலிருந்து உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட செம்பனை எண்ணெய்;

(LVII) கால்நடை தீவனச் செடியினதும் (அல்பல்பா) சிற்றுருண்டைகளினதும் இறக்குமதி ;

(LVIII) HS குறியீடு *8903.91.00* என்பதன்கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்டவாறான உலாப்படகும் மகிழ்ச்சிக்கான அல்லது விளையாட்டுகளுக்கான வேறு கலங்களும், துடுப்புப் படகுகள் மற்றும் கென்வஸ் ஆகியவற்றின் இறக்குமதி; அத்துடன்

(LIX) கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப் பகுதியின்போதும் வர்த்தகத் தொழிற்பாடுகள் தொடங்குவதற்கு முன்னரும், ஐம்பது மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்குக் குறையாத மூலதன முதலீட்டைக் கொண்டுள்ள 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ள தொழில் முயற்சியொன்றினால், அத்தகைய தொழில்முயற்சியின் ஏதேனும் கருத்திட்டத்தில் பயன்படுத்துவதற்காக கருத்திட்டத்துடன் தொடர்புபட்ட ஏதேனும் பொருளின் இறக்குமதி."

(2) அவ்வட்டவணையின் பாகம் II இல் -

(அ) அதன் (vii) ஆம் விடயத்தில்-

(i) பந்தி (இ) என்பதில், "நிர்மாண உப ஒப்பந்தக்காரர் ஒருவரின் சேவை;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"நிர்மாண ஒப்பந்தக்காரர் அல்லது உப ஒப்பந்தக்காரர் ஒருவரின் சேவை; அல்லது";

(ii) அதன் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப்பின்னர் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(ஈ) 2019, நவம்பர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், நிர்மாண

ஒப்பந்தக்காரர் ஒருவரின் அல்லது உப ஒப்பந்தக்காரர் ஒருவரின் சேவை;"; அத்துடன்

(ஆ) அதன் (xii) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"(xii) ஹோட்டல், விருந்தினர் விடுதி, உணவகம் ஒன்று அல்லது அதனையொத்த வேறு தொழிலொன்று இலங்கை சுற்றுலாப்பயணச் சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஹோட்டல், விருந்தினர் விடுதி, உணவகம் ஒன்றினால் அல்லது அதனையொத்த வேறு தொழிலொன்றினால்-

(அ) 2011, சனவரி 1ஆந் தேதிக்கு முன்னர் வழங்கப்பட்ட சேவைகள்; அல்லது

(ஆ) 2019, நவம்பர் 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர், இலங்கையிலுள்ள வங்கி ஒன்றினூடாக வெளிநாட்டு நாணயத்தில் அத்தகைய சேவைக்கான கொடுப்பனவு பெறப்பட்டுள்ளவிடத்து வழங்கப்பட்ட சேவைகள்;".

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*